மலர் : 1, இதழ் : 2

E - ISSN 2456 - 5571

சீர்மிகு

# வளர் தமிழ் ஆய்வு

## (பன்னாட்டு ஆய்விதழ்)

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் சி. மைக்கேல் சரோஜினி பாய்

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

2022

# பொருளடக்கம்


1. **மொ. தங்கவேல்**
புரவலர் - புலவர் நட்பு 9

2. **சோ.தண்டபாணி,**
நாட்டுப்புறப் பாடல்களில் அகத்திணை மரபுகள் 11

3. **வை.தர்மலிங்கம்**
எஸ் செந்தில்குமாரின் கழுதைப்பாதை நாவல் முதுவர் வாழ்வியல் 15

4. **கவிஞர் தஸ்லிம்காஜா**
உலக மறையான திருக்குறளும் உன்னதம் நிறைந்த பெரும்பொருளும் 19

5. **தாயம்மாள் அறவாணன்**
"ஔவையாரின் ஔடதம்" - ஔவையின் படைப்பா? 23

6. **பி. திவ்யா**
பாஸ்கா நாடகத்தின் ஒளியமைப்பு 25

7. **செ.துளசி**
கற்றல் கற்பித்தல் - சமகாலப் பார்வை 28

8. **க.தேவதாஸ்**
தாமிரபரணி ஆற்றங்கரை பேராச்சியம்மன்:
தேவேந்திரகுல மள்ளர்களின் அம்மன் - சமூக, சமயவியல் பார்வை 31

9. **அ.தேன்மொழி**
ஆண்கள் பற்றிய பழமொழிகளும் புரிதலும் 35

10. **அ. நந்தினி**
கலகக் குரலாய் ஒலிக்கும் மணிவளனின் வசன கவிதைகள் 39

11. **க.நாகநந்தினி**
புலம் பெயர்ந்தோர் இலக்கியங்களில் வாழ்க்கைப் பதிவுகள் 44

12. **பா.நேருஜி**
பெண்கள் பற்றிய பழமொழிகளும் புரிதலும் 49

13. **க. பஞ்சவர்ணம்**
ஜெயகாந்தனின் சிறுகதைப் பனுவல்களில் விளிம்புநிலைப்
பெண்கள் பற்றிய பதிவுகள் 52

14. **ச.பட்டம்மாள்**
பாம்பாட்டிகளின் வாழ்வும் சமூகச் செயல்பாடும் 57

15. **ஆர்.எஸ்.கே.பாக்கியலட்சுமி**
உண்மை உணர்தோர் உன்னதத்தொண்டு 60

16. **அ.பாரதிராணி**
சிலப்பதிகாரக் கானல்வரிக் காதையில் மறித்துக்கூறல் 63

17. **ச. பாலமணிகண்டன்**
வாழ்வின் வெற்றிக்கு வள்ளுவம் பகரும் வழிகள் 67

18. **சு.பிரியா**
ஆசாரக் கோவை உணர்த்தும் தமிழ் அறம் 71

# பாஸ்கா நாடகத்தின் ஒளியமைப்பு

## முன்னுரை

பாஸ்காநாடகம் என்பது தமிழகத்தில், கிறித்தவ ஆலயங்களில் நிகழ்த்தப்படு கின்ற மேடைநாடகம் ஆகும். தொடக்கத்தில் தமிழகத்தில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் நிகழ்ந்த இந்நாடகம் தற்போது 30க்கும் குறைவான இடங்களில் நடைபெறுகின்றது. கூத்துமரபிலிருந்துவளர்ச்சியடைந்த இந்நாடகம் இயேசுவின் உயிர்ப்பைத் தொடர்ந்துவரும் வாரத்தில் இரண்டுஅல்லது மூன்றுநாட்கள் இரவில் தொடர்ந்து நடைபெறும் நாடகம் ஆகும். பாவை வைத்து நடத்தும் பொம்மை பாஸ்காவாக இருந்து, கூத்து வடிவில் நடைபெற்று, தற்போது மேடை நாடகமாகப் பரிணமித்திருக்கும் பாஸ்கா நடகத்தின் நிகழ்த்துதலில் ஒளியமைப்பின் பங்கினை ஆராய்கின்றது இக்கட்டுரை.

நாடக நிகழ்த்துதலில் ஒளியமைப்பு என்பது அரங்கத்தின் முக்கியமான கூறாகும். இந்த ஒளி பொருத்தமுற அமையாவிட்டால் மேடையில் உள்ள எதுவும் தெளிவுற தெரியாது. தொடக்கக் காலங்களில் மேடைக்கான ஒளி மூலமாக தீப்பந்தம் இருந்தது. பின்னர் பெரிய மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தினர். மின்சாரம் வந்த பின் சாதாரண மின் விளக்குகளைப் பயன்படுத்தி வந்தனர். இன்று பல வண்ணங்களில் பல வடிவங்களில் வகை வகையான விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர். ஒளியை உருவாக்கும் ஒளிச் செறிவு, ஒளியின் நிறம், ஒளி வரும் திசை ஒளிப்பங்கீடு ஆகிய நான்கு நிலைகள் ஆய்வுக்குரியன. இவற்றின் அடிப்படையில் மேட்டுப்பட்டி, இடைக்காட்டூர், சருகனி, காரங்காடு, பொத்தமேட்டுப்பட்டி ஆகிய ஐந்து ஊர்களில் நடைபெறும் பாஸ்கா நாடகத்தின் ஒளியமைப்பு ஆராயப்படுகின்றது.

## ஒளியின் செறிவு

ஒளியின் அளவு அல்லது அடர்த்தி ஒளியின் செறிவு எனப்படுகின்றது. ஒளிச் செறிவின் அளவைப் பொறுத்து அதிக செறிவுடைய ஒளி, குறைந்த செறிவுடைய ஒளி என ஒளியை இரண்டாகப் பகுக்கலாம். இவ்வொளி அளவுநாடகக் காட்சியின் பொருளுக்கேற்ப அமைகின்றது.

பாஸ்கா நாடகங்களில் கதைத் தலைவனாம் இயேசு வரும் காட்சிகளில் ஒளிச்செறிவு மிகுதியாக இருப்பதையும் எதிர்நிலையினர் முதன்மை பெறும் காட்சிகளில் ஒளிச்செறிவு குறைந்திருப்பதையும் காண முடிகின்றது. இத்தகு ஒளியினை விளக்கின் தன்மை, விளக்குகளின் எண்ணிக்கை, மேடையில் விழும் நிழல் முதலியவற்றால் அமைக்கின்றனர். அனைத்துப் பாஸ்காகளிலும் இந்நிலையைப் பார்க்க முடிகின்றது. இடைக்காட்டூர் பாஸ்காவில் ஒளிவிளக்கின் கோணம் இதைத் தீர்மானிக்கின்றது. மேட்டுப்பட்டியிலும் சருகனியிலும் விளக்குகளின் எண்ணிக்கையும் தூரமும் இதைத் தீர்மானிக்கின்றன. காரங்காட்டில் விளக்கின் வகையால் இம்மாற்றம் ஏற்படு;த்தப்படுகின்றது. அதாவது குறைந்த ஒளிக்கு குழல் விளக்குகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. மிக அதிகமான ஒளிக்கு பிரகாசமான விளக்குகள் (குழமன டுபைலீவ) பயன்படுத்தப்படுகின்றன. பொத்த மேட்டுப்பட்டியில்; குறைந்த ஒளி தேவைப்படும்போது விளக்கின் கோணத்தால் மேடையில் நிழலை உண்டாக்குகின்றனர். அதிக ஒளி தேவைப்படுகையில் அக்கோணத்தை மாற்றி மேடையில் நிழல் தோன்றாமல் இருக்கச் செய்கின்றனர்.

## ஒளியின் நிறம்

ஒளியின் நிறமானது காட்சியின் பொருளை அறியச் செய்ய பயன்படுத்தப்படுகின்றது. "ஒளி அவதானிப்பின் மிகவும் சக்தி வாய்ந்த கருவியாக வர்ணம் அமைகிறது". பாஸ்கா நாடகத்தில் ஒவ்வொரு நாடகத்திலும் பல்வேறு வண்ண ஒளிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பெரும்பாலும் குறியீட்டுத் தன்மையோடோ இத்தகு உணர்விற்கு இந்த நிறத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்னும் பொதுமைத்தன்மையோடோடு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

---

முனைவர் பி. திவ்யா, பாத்திமா கல்லூரி, மதுரை.

---

இடைக்காட்டூர் பாஸ்காவில் சிவப்பு,பச்சை,மஞ்சள்,நீலம் முதலிய நிற ஒளிகள் பயன்படுத்தப்படுகின்றன. இயேசுவின் முதல் வருகை திருமுழுக்கு யோவான் இயேசுவின் வருகை குறித்து முன்னறிவித்தல், இயேசு பேய் பிடித்தவரிடமிருந்து பேயை ஓட்டுதல், இயேசு உருமாற மலை மீது ஏறிச் செல்லுதல், கெத்சமணியில் இரத்த வியர்வை சிந்துதல், சிலுவை சுமத்தல் போன்ற காட்சிகளில் சிவப்புநிறம் பயன்படு;த்தப்படுகின்றது. இயேசு திருமுழுக்கு பெறுதல், புதுமைகள் செய்தல், சிலுவையில் இறத்தல், இயேசுவின் உயிர்ப்பு போன்ற காட்சிகளில் பச்சை மஞ்சள், நீலம் முதலிய நிறங்கள் மாறி மாறி வந்து மின்னொளியாகப் பாய்கின்றன.

மேட்டுப்பட்டி பாஸ்காவில் இயேசு புதுமைகள் செய்யும்போதும் துன்புற்று இறக்கும் போதும், இயேசுவின் உயிர்ப்பின் போதும் விண்ணேற்பின் போதும் பல் நிற மின்னும் ஒளி பாய்ச்சப்படுகின்றது. சிவப்பு, பச்சை, மஞ்சள் நிற விளக்குகள் பயன்படுத்தப்படும் காரங்காடு பாஸ்காவில் தலைமைச் சங்கத்தார் இயேசுவுக்கெதிராக சதித்திட்டம் தீட்டுதல், யூதாஸ் இறத்தல், இயேசுவின் இறப்பு, போன்ற காட்சிகளில் சிவப்பு ஒளியும், இயேசு திருமுழுக்குப் பெறுதல், இயேசுவின் புதுமைகள், இயேசு உயிர்த்தல், விண்ணேற்படைதல், இயேசுவின் இரண்டாம் வருகை போன்ற காட்சிகளில் பயன்படுத்தப்படுகின்றன. சருகனியிலும் ஏறக்குறைய இதேநிலைதான் நிலவுகின்றது. பொத்தமேட்டுப்பட்டியில் பச்சை, சிவப்பு, இளஞ்சிவப்பு நீலம், மஞ்சள் முதலான வண்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உலகத் தோற்றம், இயேசுவின் பிறப்பை வான தூதர்கள் இடையருக்கு அறிவித்தல், அலகை இயேசுவை முதல்முறை சோதிப்பது ஆகிய காட்சிகளுக்குப் பச்சை நிற ஒளியும் ஆதிப் பெற்றோரின் பாவம், திருமுழுக்கு யோவான் பரிசேயரைச் சாடுதல், இயேசு அலகையால் இரண்டாம் முறை சோதிக்கப்படுதல் முதலான காட்சிகளில் சிவப்பு நிறமும் வானதூதர் சூசையப்பருக்குக் காட்சிதருதல்,அலகை இயேசுவை மூன்றாம் முறை சோதித்தல் போன்றகாட்சிகளுக்கு இளஞ்சிவப்பு நிற ஒளியும் பயன்படுத்தப்படுகின்றது. இயேசுவினால் பார்வை பெறும் குருடன் இயேசுவைச்சந்திக்கும் முன் பாடல் பாடி வருதல், இயேசு ஓட்டலோகமாய் (ஊர்வலமாக) அழைத்துச் செல்லப்படுதல், யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுக்க உடன்படுதல், இறுதி இரா உணவு, இயேசுவை மறுதலித்த சீமோன் மனம் திரும்புதல், கைது செய்த இயேசுவை இழுத்து செல்லுதல், இயேசுவைக் கற்றூணில் கட்டி அடித்தல் போன்ற காட்சிகளில் அனைத்து நிறங்களும் மாறி மாறி வருகின்றன. ஆனால் அவை மின்னொளி போல வேகமாக மாறாமல் மெதுவாக மாறுகின்றன. மேலும், இயேசு திருமுழுக்குப் பெறுதல், புதுமைகள் செய்தல், தேவாலயத்தில் வணிகம் செய்வோரை விரட்டுதல், இயேசுவின் மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு போன்ற காட்சிகளில் பல வண்ண மின்னொளி பாய்ச்சப்படுகின்றது.

மேற்கண்டவற்றை நோக்குகையில் சோகம், கோபம் முதலான உணர்வுகளை உள்ளடக்கிய காட்சிகளில் நிறங்கள் பயன்படுத்தப்பட்;டன. ஆவை பெரும்பான்மை சிவப்பு நிறமாகவே அமைந்தன. இவை தவிர்த்து இயேசுவின் திருமுழுக்கு, உருமாற்றம், புதுமைகள், உயிர்ப்பு, விண்ணேற்றம் முதலான மீவியல்பு காட்சிகளில் பெரும்பான்வீமையும் மின்னொளிகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், இயேசுவின் இறப்பிலும் மீவியல்பு காட்சி பயன்படுத்தப்படுகின்றது. மேற்கண்ட பாஸ்கா நாடக ஒளியின் நிற அமைப்பினை அமைப்பியல் அடிப்படையில் அணுகும்போது இயல்பான உணர்வுஓ இயல்பிற்கு அப்பாற்பட்ட உணர்வு என்ற எதிர்வுகள், நிறமற்ற ஒளிஓ நிறமுள்ள ஒளி என்னும் அமைப்பினைக் கட்டமைக்கின்றது. அத்தோடு, இயல்புக் காட்சிஓ மீவியல்புக் காட்சி என்னும் உணர்வனது, மின்னாத ஒளிஓ மின்னொளி என்ற ஒளியின் இயக்க அமைப்பினை உருவாக்குகின்றது.

**ஒளியின் திசை**

நாடக மேடையில் ஒளி எந்தத் திசையிலிருந்து பாய்ச்சப்படுகின்றதோ அதைப் பொறுத்து அது ஒரு அரங்க மொழியைப் பதிவு செய்கின்றது. எனவே, எக்காட்சிக்கு எத்திசையில் ஒளி பாயவேண்டும் எனத் தீர்மானித்தல் அவசியமாகும். ஒளி பாய்ச்சும் திசையடிப்படையில் விளக்குகளை முன் விளக்கு,பின் விளக்கு, பக்க விளக்கு,கீழ் விளக்கு, மேல் விளக்கு என ஐந்தாகப் பிரிப்பர்.

மேற்கண்டவற்றில் பாஸ்கா நாடகங்கள் பெரும்பாலும் முன் விளக்கு திசையையே தேர்ந்தெடுக்கின்றன. ஆனால் அவை ஒளியை நடிப்பவரின் முகத்திற்கு நேரே காட்டாமல் மேடையின் மேல் பகுதியில் உள்ள முன் புறத்திலும், கீழ் ஓரத்திலும் விளக்குகளைக் கட்டி, அவை மேடையின்

உள்ளே திரும்பியிருக்குமாறு அமைத்து நடிகரின் மேலே ஒளி விழுவது போன்ற கோணத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.

இவற்றில் பெரும்பாலும் கதைத் தலைவராம் இயேசு முதன்மைப் பெறும் காட்சிகளில் இரு விளக்குகளும் ஒளியூட்டப்படுகின்றன. ஆனால், எதிர்நிலையினர் முன்னிலை பெறும் காட்சிகளில் கீழிருக்கும் விளக்குகள் மட்டுமே ஒளிரச் செய்யப்படுகின்றன. இதனால் மேடையில் அதிகப் பிரகாசமற்ற ஒளி பரவுகின்றது. இந்தக் கீழு; விளக்குகள் பெரும்பாலும் நிழல் ஏற்படுத்தாதவாறு அமைக்கப்படுகின்றன. ஆனால் பொத்தமேட்டுப்பட்டியில் மட்டும் கீழ் விளக்குகள் மட்டும் எரியும்போது நிழல் தோன்றுகின்றது. அது மேடையை மேலும், இருளடையச் செய்கின்றது. இவ்வாறு ஒளியின் திசையைப் பயன்படுத்தி மேடை மாற்றியமைக்கப்படுகின்றது. துலைமை முன்னிலைஒ எதிர்நிலை முன்னிலை என்னும் எதிர்வானது, மேல் மற்றும் கீழ் விளக்கு ஒ கீழ் விளக்கு மட்டும் என மாறுபட்ட ஒளியை ஏற்படுத்தி, அதனால் அதிக ஒளிஒ மங்கிய ஒளி என்னும் எதிர்வான ஒளியமைப்பை ஏற்படுத்துகின்றது.

**ஒளிப்பங்கீடு**

ஒளிப் பங்கீடானது மேடையின் எவ்விடத்திற்கு எவ்வளவு ஒளியைச் செலுத்த வேண்டும் எனத் தீர்மானிப்பதாகும். இவ்வாறு தீர்மானிப்பது அவ்விடத்திலிருக்கும் பாத்திரம், சூழல் முதலியவற்றைச் சார்ந்தமையும், சில பாத்திரங்களுக்குக் குறையொளிப் பாய்ச்சுதல் அல்லது குறிப்பிட்ட பாத்திரத்தின் மீது மிகை ஒளிப் பாய்ச்சுதல் என்பது இதன்பாற்படும். கூட்டமாகப் பல பாத்திரங்கள் இயங்குகையில் குறிப்பிட்ட பாத்திரத்தைப் பிறவற்றிலிருந்து பாகுபடுத்திக் காட்ட இது பயன்படுகின்றது. இதற்குப் பெரும்பாலும் 'சுட்டொளி' பயன்படுத்தப்படுகின்றது.

பாஸ்காநாடகத்தின் மையம் அதன் தலைமைப் பாத்திரமான இயேசுவே. ஆனால் அவரதுஆடையமைப்புபெரும்பாலும் அவருடையசீடர்களின் ஆடையோடுஒத்துஅமைகின்றது. இந்நிலையில் கதைத் தலைவரைப் பிரித்துக் காட்டும் பொருட்டும் அவரதுதெய்வீகத் தன்மையைவெளிப்படு;த்துவதற்கும்அனைத்துஊர் பாஸ்காவிலும் இயேசுபாத்திரத்தின் மேல் சுட்டொளிபாய்ச்சப்படுகின்றது. சீடர்களோடு இன்றி,எதிர்நிலையினர் முன் குற்றவாளிபோலநிறுத்தப்பட்ட சூழலிலும் அவர்மீதுசுட்டொளிஅமைக்கப்படுகின்றது.

**முடிவுரை:**

மேடைநாடகங்களில் ஒளியமைப்புமிகவும் முக்கியமானது. அறிவியல் தொழில்நுட்பம் மேம்பட்டுள்ள இன்றைய நாட்களில் ஒளியமைப்பு மேடையை கட்புலனாக்கும் பணியை மட்டுமன்றி நாடகம் தரும் உணர்வை, பார்வையாளரிடம் மிகுவிக்கும் பணியையும் செய்கிறது. பாஸ்கா நாடகங்கள் மேடை நாடகம் எனினும் கிராமங்களில் நடைபெறக் கூடியது. ஒளியமைப்பு தொழில் நுட்பத்தை மிகத் துல்லியமாகப் பயன்படுத்தும் அளவிற்கு தொழில்நுட்ப அறிவோ அல்லது அதற்கான கருவிகளைப் பயன்படுத்தும் பொருளாதார வளர்ச்சியோ இல்லாமலிருந்தாலும் ஒளியமைப்பை நாடக ஆக்கத்தில் அழுத்தமாகப் பயன்படுத்தி நாடகத்தின் உணர்வைக் கடத்துவதற்குப் பயன்படுத்துகின்றமை ஆய்வில் புலனாகின்றது.

*********

V2-6

யாதும் ஊரே யாவரும் கேளிர்

# வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

## பதினெட்டாவது பன்னாட்டுக் கருத்தரங்கம்

## பங்கேற்புச் சான்றிதழ்

திருமிகு / முனைவர் / பேரா. பி. திவ்யா அவர்கள்

28.05.2022 அன்று திண்டுக்கல், எம்.வி. முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரியோடு இணைந்து நடத்தப்பட்ட வளர் தமிழ் ஆய்வு மன்றப் பதினெட்டாவது பன்னாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்றார் / பங்கேற்று பாலிகா நாடகத்தின் ஒளியமைப்பு என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

| | | |
|---|---|---|
| முனைவர் தாயம்மாள் அறவாணன் | திருமதி க. சின்னம்மாள் சின்னராணி | முனைவர் சி.மைக்கேல் சரோஜினி பாய் |
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |